முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நின்றசீர்நெடுமாற நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

27.12.2018, வியாழக்கிழமை

1. **ஞானயோக சித்தே அரங்கா**
**ஞானிகளை வணங்க சித்தியும்**
**ஞானமும் கிட்டுமென மக்களுக்கு**
**ஞானவழி காட்டி அருளுகின்ற**
2. அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
வரமென ஒளி சூட்சும நூலை
வையகத்தில் **விளம்பி சிலை திங்கள்**
3. **திங்களிலே வியதிகதி குரு வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 12ம் நாள் 27.12.2018, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு நின்றசீர் நெடுமாற நாயனாரும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்காரம் ஒலி எங்கும் பரவ
4. பரவவே கலி மாயை சிக்கல்
பாருலகை விட்டு விலகும்
துறவு நிலை போன்ற மனநிலை
தூயபக்குவங்களை பெருகி மக்களிடை
5. மக்களிடை மனத்தெளிவு திடம்
மனோ பலம் ஞானபலமும் கூடும்
தேக்கமிலா தரும சிந்தையும்
தெய்வ பலமும் தருமபலமும் கூடி
6. கூடியே உலகம் எங்குமே
குறைபாடு தரும இன பேதம்
நாடிடும் வக்ர கொடூர நிலைகள்
நாட்டிடுவேன் இனி தொடரா அகலநேரும்
7. நேருமைமிக்க அரங்க ஞானி
ஞானக் கொள்கைகளெல்லாம்
வருமுலகில் மக்களிடை வலம்வர
வஜ்ராயுதம் போல சன்மார்க்க நெறி
8. நெறி பிறழா மக்களாய்
நீதிமான்களாய் உலகோர் சிறந்து
அறியாமை ஒழிந்து மெய்யறிவும்
ஆற்றலும் ஆறுமுகன் அருளும் கூடி
9. கூடி சிறப்பர் குறைகள் இன்றி
குடில் தருமம் ஏற்று வருபவரெல்லாம்
தேடியே ஞானிகள் துணை கூடி
தேசிகன் பலம் பெற்றவர்களாகி

10. ஆகியே ஞானிகள் ஆகும்
ஆறுமுகன் ஞானத் தேர்வில்
அகிலமதில் இடம் பெற்றுமே
ஆகுவர் கலிகால ஞானிகளாய்

11. ஞானிகளாய் நவகோடியர் உருவாகி
ஞானயுகம் அமைவது உறுதி
ஞானதேசிகன் வழிக்கு வர
ஞானயுகம் சடுதி அமையும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நின்றசீர் நெடுமாற நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானயோகங்கள் அநேகம் அநேகம் செய்து வெற்றி கண்டிட்ட ஞானயோக சித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானிகளை வணங்கினால் சித்தியும் ஞானமும் கிடைக்கும் என்றே மக்களுக்கு ஞானவழிதனை காட்டி அருள் செய்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறிய கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 12ம் நாள் 27.12.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே முருகப்பெருமானின் உலகம் இவ்வுலகினில் அமைந்திடவே நின்றசீர் நெடுமாற நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நின்றசீர் நெடுமாற நாயனார்.

உலகினில் முருகப்பெருமானின் ஓங்கார ஒலி எங்கும் பரவபரவ, முருகப்பெருமானின் நாமங்கள் ஒலிக்க ஒலிக்க, கலியுகத்தின் மாயையினால் உண்டாகும் சிக்கல்கள் இந்த உலகினை விட்டு விலகிடுமப்பா. துறவுநிலை போன்ற மனநிலை உருவாகி தூய்மையான பக்குவங்கள் எல்லாம் பெருகி மக்களிடையே மனத்தெளிவும் திடமும் உருவாகி மனோபலமும் ஞானபலமும் பெருகிடும், தேக்கம் இல்லாத தருமசிந்தையும் தெய்வபலமும் தருமபலம் கூடி நிற்கும்.

உலகமெங்கும் உள்ள குறைபாடுகளை உண்டாக்கும் இனபேதங்கள் எல்லாம் மறைந்து வக்ரங்கள் இனி தொடராமலும் கொடூரநிலைகள் எல்லாம் மாறி உலகினில் இனி தொடர்ந்து அச்செயல்கள் நடைபெறாமல் முற்றிலுமாய் அகன்றிட நேர்ந்திடும்.

நேர்மைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியின் ஞானக்கொள்கைகள் எல்லாம் வருங்காலங்களில் மக்களிடையே வலம்வர வஜ்ராயுதம் போன்ற பலம்மிக்கதான அரங்கனின் சன்மார்க்க நெறியினை மக்களெல்லாம் பின்பற்றி நெறி பிறழா மக்களாய், நீதிமான்களாய் வாழ்ந்து சிறந்து அவரவருள்ளும் உள்ள அறியாமை எனும் இருள் அகன்று மெய்யறிவும் ஆற்றலும் முருகப்பெருமானின் அருளும் பெருகி சிறப்படைவார்கள்.

குடிலினில் நடக்கும் தர்மங்களுக்கு தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்தும் குடில் தருமத்திற்கு உதவி வருபவர்கள் எல்லாம் ஞானிகளின் துணையைப் பெற்று ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பலத்தினை பெற்றவர்களாக ஆகி, ஞானிகளாக ஆகும் வாய்ப்பினை முருகப்பெருமான் நடத்தும் ஞானத்தேர்வினில் இடம் பெற்று கலிகால ஞானிகளாய் ஆகிடுவார்கள்.

நவகோடி ஞானியர்கள் உலகினில் உருவாகி இவ்வுலகினில் இனிவரும் காலம் ஞானயுகம் அமைவது உறுதி உறுதி. ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகானின் ஞானக்கொள்கைகளை ஏற்று மக்களெல்லாம் தவறாமல் நடந்திட ஞானயுகம் விரைந்து அமைந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நின்றசீர்நெடுமாற நாயனார்.

–சுபம்–